தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.

"நாயிலுங் கடையாய் நலிவது மேலே?
நல்ல கூட்டுத்தொழில்கள் நாட்டிடல் மேலா?"
[கவி பாரதிதாசன்]

மலர் 1. | காஞ்சிபுரம் 6—9—42 சித்திரபானு—ஆவணி 21—ஞாயிறு | இதழ் 27

தூதுநீ சொல்லிவாராய்!

பாதன்

"தூதுநீ சொல்லி வாராய்—பெண்ணே
குற்றாலர் முன்போய்த்
தூதுநீ சொல்லி வாராய்!

* * * *

ஆதிநாட் சுந்தரர்க்குத்
தூதுபோனவர் முன்னே (தூதுநீ)

* * * *

வந்நாலிங்கோம் வாச்சொல்லு—வாராதிருந்தால்
மாலையாகிலும் தாச்சொல்லு—குற்றாலநாதர்
தந்தாலென் னெஞ்சைத்தரச்சொல்லு-தராதிருந்தால்
தான்பெண்ணாகிய பெண்ணை நான்விடேனென்று (தூ

"கன்னியரென்ன, கல்லுங்கரையுமே, 'நான்சொல்லி வருவேன் தூது' என்று முன்வருமே! என்ன இனிமை! எவ்வளவு உருக்கம்! என்ன எழில்! தேசிகரின் செந்தமிழ் இசையின் திறனைக் கேட்ட பிறகும், தமிழிலே இசை தகுமோ, கூடுமோ, என்று பேசுவோரும் கிளம்ப முடியுமோ," என்றனர் தமிழர் அன்று. குயில், சோலையின் ரம்மியத்தைக் கண்டால் கூவுமாம்! மேகத்தின் மனோகரங்கண்டு மயில் ஆடுமாம்! அன்று தேசிகர் சோலைக் குயிலானார்! தமிழர் சோலை! முகமெலாம் மலர்கள்! விழியெலாம் ஒளிதான்! பேச்சும் மூச்சும் தமிழ் மயம். தமிழ் மணம் கமழும் திருநாளன்று, "நாளைப் போகாமலிருப்பேனோ" என்றுருகிய நந்தன், அந்த வேடத்தில், தமிழ் நாட்டவரை விரைவில் மகிழ்விக்கப் போகும் (நந்தனார்-தமிழ்ப் படக்காட்சி மூலம்) நண்பர் தண்டபாணிதேசிகர் அவர்கள் குற்றாலக்குறவஞ்சியிலிருந்து மேலேதந்த பாடலை மணிரங்கில், மதுரமாகப் பாடி, மக்களை மகிழ்வித்தார். இவ்வளவு இனிமையப்பா தமிழ்! இசைக்குப் பொறுத்தமானதப்பா இனிய தமிழ்! என்பதை எடுத்துப் பொழிந்த பின்னர், எங்கள் தமிழ்மொழி எங்கள் கண்டு! என்று உரிமையோடு, உள்ள எழுச்சியோடு, உவகையோடு, உற்றார்முன் உள்ளோம் என்ற உணர்ச்சியோடு, வாழுமிடம் தமிழுலகம் என்ற பூரிப்போடு பக்கத்திலே வீற்றிருப்பவர், தமிழர் தலைவர் பெரியார் என்ற பெருமையினை உணர்ந்து உற்சாகங்கொண்டு, ஆடும் சிரமும், பாடும் பார்வையுங்கொண்ட மலர்முகச் சோலை, மதிவளர்சாலை, கலைக்கோயில், என்று தோன்றிட்ட மன்றத்திலே பாடுகிறோம் என்ற பரிவுடன், தேசிகர் பாடினார்.

குற்றால நாதருக்குத் தூது கூறினார்களோ இல்லையோ நானறியேன், பக்திப் பிரபாவ விஷயத்தைத் தெரியேன், ஆனால் தூதுநீ சொல்லிவா, பெண்கள் மட்டுமா, ஆண்களுங்கூட அன்று சித்தமாயிருந்தனர், குற்றாலத்தாரிடமல்ல, தமிழ் நாட்டாரிடம், மாலைதரச் சொல்லியல்ல, தமிழரின் செங்கோலை!

தமிழரிடம் செங்கோல் இருந்த காலையில், என்னென்ன எழில்கள் இருந்திருக்குமென்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்தன, காட்சிகள், காஞ்சியில்.

மூவேந்தர் முப்முரசுகொட்டி முத்தமிழ் வளர்த்த காலையிலே, தேசிகரைப் போன்ற இசை அரசுகளை, மன்றங்களிலே இருந்திருக்க முடியும்! எங்கள் தமிழ் மொழி கற்கண்டு, என்று மார்தட்டிக்கூறி இருக்க முடியும். இன்பத் தமிழின் வெள்ளத்திலே நீந்தி விளையாடித் தமிழர் வாழ்ந்த நாள் ஒன்றுண்டு! அந்த வாழ்வு இன்று இல்லை! நாளைவராது போனால் தந்தால் அவ்வாழ்வைத் தரச்சொல்லு தராவிட்டால் மீளாத்துயர்க்க மேலும் தடச்சொல்லு என்று தமிழர் யாவரும் கேட்டுக்கொள்ளும் நாள் இது.

* * * *

நான் இசைவாணனல்ல; தமிழன்! தமிழ்வெறும் பேச்சு மொழியல்ல, பாட்டுமொழி! எனவே இசைவாணராக இராது போயினும் தமிழர், பாடலின் ரசத்தைப் பருகிட முடியும்! பாடலின் ரசம், தமிழாக (சுவையாக) இருக்கவேண்டுமானால், தமிழ் (தமிழ்மொழி) வேண்டும். தமிழைத் தமிழிலே தமிழர் முன்னிலையில் தமிழ் மணமன்றத்தில் தமிழர், தந்தார். தேசிகரின் இசையைக் கேட்டு இன்புற்றனரே இசை அரசே! என்று அன்புததும்ப அன்று சென்னை கோகலே மண்டபத்திலே நமது செல்வம் அழைத்தார். அந்த 'இசை அரசு'வின் இனிய தமிழ் இசையை நமது மாகாணத்தின் பற்பல பாகங்களிலுமிருந்துவந்த தமிழர்கள் கேட்டுக் களித்தனர். காணும் காட்சி, கருத்துரை, கனிவு இவ்வளவும் பெற்றுச் சென்ற தோழர்களைப் பார்த்துத்தான் நான் கூறுகிறேன், தூதுநீர் சொல்லிவாரீர் என்று. வாராதிருந்தோருக்குக் கூறுங்கள், வந்திருந்தோர், மீண்டும் மீண்டும் சிந்தியுங்கள், தமிழ் உணர்ச்சி கொள்ளுங்

கள், மற்றதைத் தள்ளுங்கள், தடை நீக்கிடுங்கள், வாகை சூடுங்கள் என்று கூறுகிறேன். தங்கவேலரை நான் தருணமறியும் தங்கவேலர் என்று அழைத்திருக்கிறேன் ஒரு முறை, கனிவுடன் மட்டுமல்ல, காரணத்தோடு. அதை உறுதிப் படுத்தி விட்டார் இப்போது.

வெப்பம் வாட்டும் போது, குளிர்ச்சியான காற்று வீசப்பெற்றால் மனம் குளிர்வதுபோல், சுருதியில் சேராத கீதம் காதைக் குடைந்து கெடுத்த காலை குழல் ஓசை கிளம்பி செவிக்கும் சிந்தனைக்கும் செந்தேனைப் பெய்வதுபோல, வறியருக்கு வாழ்வுப்பகை தடைத்திடும் வகை தோன்றுவது போல், தண்டவாளப் பெயர்த்தெடுப்பு, பாதை அடைப்பு, தீமூட்டும் திருவிழா, தெருக்கலகம், கிளறாட்டம், ஆகிய காரியங்கள் நடைபெறுவது கேட்டுக்கேட்டு நொந்த உள்ளத்துக்கு, இரண்டு நாட்கள், இனிய தமிழ் மணம் கிடைக்கச்செய்தார் தருணமறிந்து. தனது செல்வக் குமாரனுக்குத் திருமணம், அது தமிழ்முறையாகச் செய்து தமிழ் மணம் கமழ்ந்து தமிழர் மனமெல்லாம் பூரித்திட வழி செய்தார். தருணமறிந்து செய்தவர், தமிழ இசையின் சுவையுமறிந்துதான் தேசிகரை அழைத்திருந்தார், இசைவிருந்து அளிக்கவாரீர் என்று.

* * * *

தமிழர் தளபதி தோழர் A. K. தங்கவேலரின் புதல்வர் தோழர் சாம்பசிவத்திற்கும் தோழியர் அங்கையர்க் கரசியாருக்கும் தமிழ்த் திருமண வைபவம், காஞ்சிபுரத்தில் மிகவிமரிசையாக, ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30-மணிக்கு, காஞ்சீபுரம் கோட்ராம்பாளையம் கந்தன் இல்லத்தில் நடந்தேறியது.

முன்னாளிரவே. வெளியூர்களிலிருந்து தமிழர் இயக்கத்தலைவர்களும் தோழர்களும் வந்து சேர்ந்து, வெளியூர் அன்பர்களுக்கென இருந்த விடுதிகளில் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். முகமும் மனமும் மலர, விருந்தினர்கள் ஏராளமாகக் கூடினர்.

ஞாயிறன்று காலையில், கதிரோனும் தமிழரும் கண்மலர, தோழர் சக்திவேல் கோஷ்டியினரின் பூபாளம் ஆரம்பித்தது.

மாஜிமந்திரி தோழர் S. முத்தையமுதலியார் C. I. E. அவர்கள் தலைமையில், தமிழர் முறைப்படி திருமணம் நடந்தேறியது. கந்தன் இல்லத்தின் எதிரே போடப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில், மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்த தோழர்களும், தாய்மார்களும் குதூகலத்துடன் வீற்றிருந்தனர். உள்ளூர் பிரமுகர்களும் தாய்மார்களும் சந்தோஷத்துடன் திருமணத்தம்பதிகளை வாழ்த்தலாயினர்.

தலைவர் முத்தையா முதலியார், தமிழறிஞர் திருஞானசம்பந்தனார், பெரியார், அண்ணாத்துரை, ஆகியோர், மணமக்களை வாழ்த்தியும், திருமணம் தமிழ் முறையில், பார்ப்பனரை நீக்கி நடத்தப்பட்டதைப் பாராட்டியும், சொல்லும் செயலும் ஒத்து விளங்கும் தங்கவேலரின் அருங் குணங்களைப் போற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

கந்தவிலாச ஜவுளிக் கடையினர், வாலாஜாபாத் இந்து மதபாடசாலையினர், மற்றும் பல கழகங்கள் சார்பாக, மணமக்களுக்கு வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப் பட்டன. தோழர் தங்கவேலர், விருந்தினருக்கு வந்தனங்கூறினர்.

11மணிக்கு விருந்து துவங்கிற்று. ஐந்தாறு இடங்களிலே, விருந்து வசதிகள் செய்யப்பட்டதால், வந்திருந்த ஏராளமான அன்பர்களுக்கு உபசாரம் குறைவற நடந்தது. சுமார் ஆயிரம் ஏழைமக்களுக்கும் உணவளிக்கப்பட்டது. மாலை 4-மணி வரையிலே இந்த விருந்துபசாரமே நடந்தது.

மாலை 5-மணிக்கு, ரயில் ரோடில், தோழர் தங்கவேலர் புதிதாகக்கட்டி, பொதுமக்களுக்கு இனாமாக வழங்கியுள்ள கந்தன் பூஞ்சோலைத் திறப்பு விழாவும், தங்கவேல் கழகம், தங்கவேலர் படத்திறப்பு விழாக்களும், சிறப்புற நடந்தேறின. வைபவத்திலே காஞ்சிபுரம் தோழர் கெங்காதரம் இனிய இசை விருந்தளித்தார். நகர சபைக் கமிஷனர் தோழர் S. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தங்கவேல் கழகத்தைத் திறந்துவைத்து, தோழர் தங்கவேலரின் பொது நலத்தொண்டின் ஆர்வத்தைப் பாராட்டினார். பெரியார், தங்கவேலரின் குணாதிசயங்களையும், தமிழர் பணியாற்றும் திறனையும் எடுத்துரைத்து, தங்கவேலரின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். இந்த விழாவிலும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

இரவு 6-30மணியிலிருந்து 9-30வரையிலே, இன்பத்தமிழை, இசையை, இனிமையை, தென்றலை, தேனைப்பெய்து, தமிழரின் உள்ளத்தை உருக்கினார், இசை அரசு தண்டபாணிதேசிகர். வீதியெங்கும் மக்கள் கூட்டம், விழிகளிப்புமயம், தமிழரின் உள்ளம் குளிர்ச்சிமயமாக இருந்தது, தேசிகரின் தீந்தமிழ் இசையால்.

பெரியார், தேசிகரைப் பாராட்டி, அவருடைய இசைத்திறனைப் புகழ்ந்து, தமிழ் இசையை அவர் ஆதரிக்கும் அன்பினைப் போற்றியுரைத்து விட்டு, தேசிகரைத் தமிழர், குறிப்பாகத் தமிழ் செல்வவான்கள் மேன்மேலும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தமிழ் இசை பற்றிய விளக்கமும் உரைத்தார். இரவு 10-மணிக்குமேல், காஞ்சிபுரம் திருமதி சரஸ்வதி அம்மையாரின் கானம் நடந்தது.

திங்களன்று, தமிழரின் மற்றோர் திருநாள்! காலை 9-மணிக்கு காஞ்சிபுரம் கண்ணன் டாகீஸில், திராவிடநாடு பிரிவினைக் கமிட்டிக்கூட்டம் தோழர் S. முத்தையமுதலியார் தலைமையில் நடந்தது. தலைவரும் பெரியார் T. P. வேதாசலம்' A. K. தங்கவேலர், C. N. அண்ணாதுரை ஆகியோர் திராவிட நாடு பிரிவினை சம்பந்தமாக மேற்கொண்டு செய்யவேண்டியன பற்றிப் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேறின.

அடுத்த மாநாடு, டிசம்பரில், திருச்சியில் நடத்துவதென்றும் அதற்கு பிரபல முஸ்லீம் லீக்தலைவர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது, தோழர் தங்கவேலரின் வந்தனோபசாரத்துடன் 12-மணிக்குக் கமிட்டி கலைந்தது. விமரிசையான விருந்துக்குப் பிறகு, மாலை 4-மணியிலிருந்து 6-மணிவரை திருவாடுதுறை, சக்திவேல் கோஷ்டியின் நாதஸ்வரக் கச்சேரி நடந்தது.

6-30-மணியிலிருந்து 9-30 மணிவரை, தமிழ் உலகின் இசை ஏறாக இருந்து, தொண்டை நாட்டின் தொல்சிறப்பை மற்றை நாட்டினருக்கு விளக்கி, விருதுபலபெற்று, சங்கீதச்சக்ரவர்த்தியாக விளங்கிய காஞ்சிபுரம் நயினாப்பிள்ளையின் குமாரர், இசைச்செல்வர், தோழர் ரத்தினசாமியின், இசை இன்பத்தில், ஏராளமான மக்கள் இன்புற்றனர். காஞ்சித் தோழர்கள் ராதா, சுந்தரேசன், முறையே பிடில், மிருதங்கம் வாசித்தனர்.

மூன்று நாட்களாக முத்தமிழ், முக்கனி, இனிமைக்கொப்ப, வைபவத்தில் கலந்திருந்தனர் தமிழர், களித்தனர், வாழ்த்தினர்.

திருமண வைபவத்தின்போது, வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்குத் தோழர் தங்கவேலர் ஐம்பது ரூபாய் நன்கொடை வழங்கினர்.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒலிபெருக்கி ஏற்பாடாகி இருந்தது, மூன்று நாட்களும், காஞ்சியில் தமிழர் முரசே தமிழ்ச்செவியில் கேட்டவண்ணம் இருந்

9-ம் பக்கம் பார்க்க.

ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீனஸ்

"வந்து விட்டீர்களா! எதிர்பார்த்தேன். ஏன்தாமதம்? விரைவாக முடித்து விடுங்கள் காரியத்தை. உயிரை இழக்கவேண்டி நேரிடும் என்பதை நான் அறிவேன். கமோடஸ் கையிலே உள்ள கொடுங்கோல் என்போன்றோரின் உயிர் குடிக்கும் வாள் என்பதை நான் அறியேனா! காவலரே எடுங்கள் கத்தியை, வீசுங்கள், உருளட்டும் என்தலை. நொடியிலே முடியுங்கள்" என்று நடுக்கமில்லாக் குரலில், பெர்ட்டினாக்ஸ் பேசினான். அவன் விடுதிக்கு வந்திருந்த லெயிடஸ் இந்த மொழி கேட்டுத் திகைத்து நின்றான். உயிரை இப்படித் திரணமாக மதிக்கும் பேர்வழி உண்டா என்று அவர்கள் யோசிக்கவில்லை. படுக்கையை விட்டு எழுந்திராமல், பதைக்காமல், என் உயிரைப் போக்கத்தானே வந்தீர்கள், காரியத்தைச் சீக்கிரம் முடியுங்கள் என்று கூறும் தீரவான் இவன்போல் வேறுயாருமிருக்க முடியாதே என்றெண்ணிடவுமில்லை. இதென்னடா வம்பு! நாம்வந்தது எதற்கு? இவன் எண்ணிக்கொண்டது என்ன? என்பதை எண்ணியே திகைத்தனர். உண்மையில் பெர்ட்டினாக்ஸிடம் வந்தவர்கள் அவன் உயிரைப் போக்கவில்லை. அவர்கள் அவனுக்கு முடிதர வந்தனர். அவனோ தன்தலை உருளப் போகிறதென்று எண்ணினான்! அரசனாக வாரீர்! என்று பெர்ட்டினாக்ஸை அழைக்க அவர்கள் வந்தனர். அவனோ, தன்னைக் கொல்ல அவர்கள் வந்ததாக எண்ணினான்.

"ஐயா! உம்மைக் கொல்லவல்ல நாங்கள் வந்தது. ரோம் சாம்ராஜ்ய சக்ரவர்த்தியாக்கப் போகிறோம். மணிமுடியைத் தரப்போகிறோம். அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்றனர் வந்தவர்.

சாய்ந்திருந்த பெர்ட்டினாக்ஸ், "இந்த துர்ப்பாக்கியனிடமா இந்தக் கேலியும் கிண்டலும்? எனக்கு அரசு! ஏன் இந்த வம்பு?" என்றான்.

"விஷயத்தை விளக்குவோம் கேளும். ரோம்நாட்டை இதுவரை ஆண்டுவந்த கமோடஸ், மாண்டொழிந்தான். மக்களின் மனக்குறை ஒழிந்தது. ரோம் ஒரு அநீதிக்காரனை ஒழித்துவிட்டது. அரசு உம்மிடம் வருகிறது. இது உண்மை" என்றுகூறி கமோடஸ் கொல்லப்பட்டதைக் கூறினர்.

கமோடஸ், பட்டத்துக்கு வந்ததும், பதட்டமே பட்டயமாக்கி, மற்றவரை மிரட்டி அதட்டி, கேளிக்கைகளிலே மூழ்கிக்கிடந்தான். அவன் தன் மனைவி கிரிஸ்பீனாவைக் கைவிட்டு, மனோஹரியும், மயக்குவதில் வல்லவளுமான ஜாலக்காரி மார்ஷியாவுடன் குஷாலாக வாழ்ந்து வந்தான். அவனது கொடுமைக்குப்பலியானவர்கள் பலர். மார்ஷியாவின் முகமலர்ச்சி யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களின் குடும்பம் மலரும், மற்ற இடங்கள் கருகும், அவள் ஆதரித்தால் வாழ்வு இல்லையேல் வீழ்ச்சி! இந்த அளவிலே இருந்தது அரசு. மன்னன் கமோடஸ் இறுதியில், மார்ஷியாவிடமே தன் கொடுமையைக் காட்டத் தொடங்கினான். மார்ஷியா, தன் வசீகரம் மங்குவது கண்டாள், மனம் மருண்டாள். மன்னனின் கோபம், மார்ஷியாவுக்குத் திகில் உண்டாக்கிற்று. மன்னன் உயிரோடு இருக்கும் வரை உயிருக்கு ஆபத்துவரும் என்பதை உணர்ந்தாள். எனவே மன்னனைக் கொல்லத் தீர்மானித்துவிட்டாள். விஷங்கலந்த ஒருகோப்பை திராட்சை ரசம்! கமோடஸ் மாண்டான்! அந்தக் கொலைச்செயலுக்கு உடந்தையாக இருந்த லெயிடஸ் பெர்ட்டினாக்ஸை மன்னனாக்கவே, அங்குவந்திருந்தான். கமோடசுக்கு நேரிட்ட கதியைத் தெரிந்துகொள்ளாமல், லெயடஸின் நோக்கத்தையும் தெரிந்துகொள்ளாததாலேயே பெர்ட்டினாக்ஸ், வந்தவர்கள் தன்னைக் கொல்வார்கள் என்று எண்ணினான், பின்னர் விஷயம் தெரிந்தது.

பெர்ட்டினாக்ஸ் மன்னனானான். மக்களைத்தன் செங்கோலால் மகிழ்வித்தான். ஆனால், அவனுக்கு மனைவியாக இருந்தவளோ! அவள் பெயர் டைடியானா! செல்வக் குடியிற் பிறந்தவள், சிங்காரி, ஆனால் சீலமற்றவள். அவளுடைய மனம், மோகனன் ஒருவனிடம் லயித்தது. அவளுடைய மனமாகிய வீணைக்கு; சல்லாபம் எனும் நரம்புகளை அமைத்து, அந்த இசைவாணன் மீட்டினான், அந்தக் கீதம் ரோம் நகரெங்கும் கேட்டது. அவன் ஊட்டிய மோகத்தை உண்டு, டைடியானா ஆடினாள். அரசன் கன புருஷன், ஆனாலும் என்ன? அந்த இசைவாணன் பாடிடும் கீதம், எத்தனையோ சாம்ராஜ்யங்களுக்குச் சமமாக அவளுக்குத் தோன்றிற்று. அவனுடன் சரசமாடுவது வெளிப்பட்டு விட்டால், என்ன நேரிடுமோ என்ற கவலையும் கொண்டாளில்லை. தனது சுகானுபவத்தை மற்றையோர் தெரிந்துகொள்ளாமல், ஏதோ பேசினால், அதைக் காதுகொடுத்துக் கேட்பானேன் என்று எண்ணினாள்.

டைடியானா இந்த நிலையிலே, நெடு நாட்கள் வாழ முடியவில்லை. எந்த லெயிடஸ், முடியைக் காணிக்கையாக பெர்ட்டினாக்சுக்குத்தந்தானோ, அதே லெயிடஸ், மன்னன் மீது துவஜங் கொடுத்தான். அரண்மனையிலே குழப்பம்! போர் வீரர்கள் சிலர் புரட்சி செய்தனர், பெர்ட்டினாக்ஸைக் கொன்றனர். அந்தப் பிணத்தை எடுத்துப் புதைக்கவும் படையினருக்கு நேரமில்லை. ரோம் நாட்டை விலை கூறி விற்கலாயினர்!

ஆம்! இரண்டு கண்டங்களிலே வெற்றி பல கண்ட வீரர்கள் சித்தரித்த ரோம், ஜூலியஸ் சீசரின் கோட்டம், அஞ்சா நெஞ்சர்களுக்குக் கொஞ்சிடும் பூஞ்சோலையாக இருந்த ரோம், ஏலத்துக்கு விடப்பட்டது! மன்னனைக் கொன்று ஒரு புறத்திலே கிடத்திய பின்னர், அந்தப் புரட்சிப் படையினர், மேற்கொண்டு என்ன செய்வது, இனி எவரை மன்னனாகக் கொள்வது என்று யோசித்தனர். அபூர்வ முடிவு செய்தனர். ரோம் சாம்ராஜ்யத்தை விலைக்கு விற்பது என்று கிளம்பினர். அரண்மனை மதிற் சுவற்றிலே ஏறி நின்றான் ஒரு போர் வீரன், உரத்த குரலிலே கூவினான், "ரோம் விலைக்குத் தரப்படும்!" ஏலங் கூறப்படும்! தேவையானவர்கள், என்ன தொகை தரமுடியுமென்பதைக் கூறிடுக! வருக! விலை கூறுக! ரோம் விற்பனைக்குத் தயார்!!" என்று.

ஆஹா! ஈஜிப்டிலே வெற்றி, சிரியாவிலே ஜெயக்கொடி, பிரிட்டனிலே வெற்றி என்று அந்த அரண்மனையிலேயிருந்து, வெற்றி முரசு கேட்டதுண்டு! அந்த மன்னன் பணிந்தான், இன்ன அரசன் களத்திலே வீழ்த்தப்பட்டான், என்ற பரணி பாடப்பட்ட இடம், அந்த அரண்மனை. அங்கு, ஒரு போர் வீரன், ரோம் சாம்ராஜ்யமே விலைக்கு விற்கப்படும் என்று கூவினான்! விற்றான்!! அதிக விலை கொடுத்து ரோம் சாம்ராஜ்யத்தை வாங்கியவன் பெயர் ஜூலியானஸ்!

ஜூலியானஸ், அன்று விருந்துண்டு கொண்டிருந்தான் தன் மாளிகையிலே. அங்கு, அரண்மனையிலே நடந்த அமளியும், மன்னன் மாண்டதும், ரோம் விலைக்கு விற்கப்படுவதுமான செய்தி எட்டிற்று. அவனுக்கு. இந்தச் செய்தி சுவைதரவில்லை. ஆனால், இந்தச் செய்தியைக் கேட்டதும், அவன் மனைவி மனிலா, தன்னை மறந்தாள், மனம் துள்ளி விளையாடலாயிற்று, ஆனந்த அபின் உட்கொண்டவள் போலானாள், அவள் மனக்கண் முன்பு, அந்தப்புரம், சேடியர் முதலியன தாண்டவமாடிற்று.

“ஆசைகொண்டேனே, அரசாளத்தானே, ஆருயிர்க் காதலனே!” என்று அவள் கண்கள் கூறின.

“ஆபத்து அல்லவோ, அதிகாரம் கொள்ளவோ, அழிந்தவரை அறியாயோ” என்று எச்சரித்தன ஜூலியானஸின் கண்கள். மனிலா, தூபமிட்டாள், மகள் கிளாரா, அர்ச்சித்தாள், உடனிருந்தவர்கள், நயவஞ்சகத்தை நைவேத்திய மிட்டனர், ஜூலியானசுக்கு, அரசனாகவேண்டு மென்ற ஆவேசம் பிறந்து விட்டது. அரண்மனை சென்றான், எலத்துக்குத் தயாராக நின்றான், பெருந்தொகை தந்தான், மணிமுடி தரித்திருந்த தலை கீழே உருண்டிருப்பதையுங் கண்டான், கவலையைக் கொண்டானில்லை, கூப்பிடு ஆடலழகிகளை என்று உத்திரவிட்டான், கீதம் கிளம்பட்டும் என்றான், குயிலிகள் பாடினார், மயிலிகள் ஆடினர், மன்னன் உண்டான், உருசியுள்ள பானங்களைப் பருகினான், தன்னை மறந்தான்.

மணிமுடி, அதிகாரத்தை ஒருவன் பெற்றான் என்பதற்குச் சின்னமே யொழிய, ஊரார் சம்மதித்தே தருவார்கள் என்பதற்கு உறுதி மொழிச்சீட்டல்லவே! விலை கொடுத்து வாங்கியது, அரசுரிமையை என்று ஜூலியானஸ் நம்பினான், வாங்கியது கோரமரணத்தை என்பதைச் சம்பவம் விளக்கிற்று.

நைஜர், செவரஸ், ஆல்பினஸ். எனும் மூன்று படைத்தலைவர்கள் புரட்சிக் கொடியைப் பறக்கவிட்டனர். சிரியாவிலே இருந்த நைஜர், தன்படை பலத்தை நம்பினான், “நானே மன்னன்” என்று பிரகடனப்படுத்தி விட்டான், ஆண்டியாக் நகரிலே ஆனந்த வெறியிலே கிடந்தான்.

செவரஸ் என்பானோ, பானோனியா பிரதேசத்திலே புரட்சிக் கொடியைப் பறக்கவிட்டான்.

ஆல்பினஸ், பிரிட்டனிலே, இருந்து கொண்டு, ரோம் அரசுரிமை எனக்குத்தான் என்றான். செவரஸ், ஒரு சூது செய்தான். ஆல்பினசை ஏய்த்து, “உனக்காக நான் இங்கு வேலை செய்கிறேன்” என்று கூறி, ஆல்பினசை, ரோம் வரவிடாதபடி தடுத்து விட்டான். பின்னர், படையுடன், ரோம் நோக்கிப்புறப் பட்டான்.

அரண் மனையிலே ஜூலியானஸ் தவித்தான், திணறினான், யார்யாரையோ உதவிக்கழைத்தான், ஓலமிட்டான். செனட்சபை கூடிற்று, செவரசுக்கே பட்டம் என்று தீர்மானித்தது. ஜூலியானசுக்கு கிலி பிடித்துக் கொண்டது. கதறினான். செனட்சபையின் ஏவுதலால், கிளம்பினர் சில போர் வீரர்கள், ஜூலியானசைக் கொன்றனர். அரசை விலை கொடுத்து வாங்கி, ஆடம்பரமாக வாழலாம் என்று கனவு கண்ட, மனிலாவும், கிளாராவும், அரண் மனையை விட்டு வெளியே விரட்டப்பட்டனர்.

என் மௌனம்?

முஸ்லீம் லீக் தலைவர், இன்றைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க, சமரச மனப்பான்மையுடன் வெளியிட்ட அறிக்கையைக் கண்ட பிறகும் லீக் காரியக் கமிட்டி தீர்மானம் வெளிவந்த பிறகும், காங்கிரஸ் லீக் சமரசமே என் எதிர்கால வேலைத்திட்டம் என்று கூறிக் கொண்டிருந்த ஆச்சாரியார், மேற்படி காரியத்தைச் செய்யாமல் மௌனமாக இருப்பது என்?

சேலம் ஜில்லா தீவிர ஜஸ்டிஸ் இளைஞர் மாநாடு

மேற்படி மாநாடு, திருச்சி தோழர் K. A. P. விஸ்வநாதம் தலைமையில் 23—8—42ல் சிறப்புற நடந்தேறியது. பாசிச எதிர்ப்பு மாநாடு ராவ்பகதூர் ராஜமாணிக்கப் பண்டாரம் அவர்கள் தலைமையில் விமரிசையாக நடந்தேறியது.

நன்கொடை

திராவிட நாடு பத்திரிகை வளர்ச்சி கருதி, வடார்க்காடு வட்டாரத் தோழரொருவர் 100 ரூபாயும், கயப்பாக்கம் பெருநிலக்கிழார் தோழர் முத்துலிங்கா ரெட்டியார் 25 ரூபாயும், திருவாரூர் நகர சபைத்தலைவர் ராமானுஜ முதலியார் 25 ரூபாயும் நாகப்பட்டினம் காயா ரோகணம் பிள்ளையவர்கள் 25 ரூபாயும் திருச்சி திராவிட நாடு ஏஜண்ட் தோழர் பரமசிவத்தின்மூலம் திருவானைக்காவல் வடிவேல் பிள்ளை மூன்று ரூபாயும், செங்கற்பட்டுத் தோழர் ஐயாக்கண்ணு தம்பிரான் 10 ரூபாயும், தனது திருக்குமாரன் சாம்பசிவத்தின் திருமணத்தின் போது தோழர் A. K. தங்கவேலர் 50 ரூபாயும், நன்கொடை தந்துதவினர் அன்னார்களுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவாரூரில் பிரபல திருமணம்

ஷை ஊர் பிரபல தனவந்தரும் மிராசுதாருமான ப. குப்புசாமி அவர்கள் தங்கை சுந்தராம்பாள் அம்மாள் அவர்கட்கும் செங்கல்பட்டு டாக்டர் ல. சந்திரராஜு அவர்கட்கும் 23—8—42 காலை 9½-மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமண வைபவம் நடந்தன. தாலிகட்டு சடங்கு மட்டும் மாவூர் காளியம்மன் கோவிலில் நடந்தன. பின் மணமக்களை மணமகள் இல்லத்திற்கு அழைத்துவரப்பட்டது.

திருமணத்திற்கு மாகாண பல விடங்களிலிருந்து பிரபலஸ்தர்கள் உத்தியோகஸ்தர்கள் பிரபல சினிமா நடிகர்கள் நாடககாரர்கள் வந்திருந்தார்கள் ஏராளமான வாழ்த்து தந்திகளும் வந்தன திருமணத்திற்கு திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள் வந்திருந்தவர்களுக்கு மிக உற்சாகமான உபசரிப்புகள் நடந்தன 22—8—42 முதல் திருவாடுதுறை ராஜரத்தினம், வீருசாமி பிச்சப்பா மேள கச்சேரிகளும் M. K. தியாகராஜ பாகவதர். மாஸ்டர் ஜெயராமன் மாஸ்டர் நம்பிவாயம் முதலியவர் பாட்டு கச்சேரியும் நடந்தன. ஒலிபெருக்கும் வசதிகளும் அமைக்கப் பட்டிருந்தன.

ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக்செய்யவேண்டும்.

வாக்குச்சாதுர்யமாகப் பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150-முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

ஜில்லாக்கள்.

1. திருநெல்வேலி.	7. வடஆற்காடு
2. மதுரை	8 செங்கற்பட்டு
3. திருச்சிராப்பள்ளி	9. கோயம்புத்தூர்
4. தஞ்சாவூர்	10. நீலகிரி
5. இராமநாதபுரம்	11. சேலம்
6. தென்னாற்காடு	12. சித்தூர்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபிதது 1909.)

திருநிறை

மங்கையர்க்கரசி சாம்பசிவன் மணவாழ்த்து!

[பாரதி தாசன்]

பொன்னொளிசேர் மகரந்த பொடிபோய் மற்றோர்
பொழில்மலரைத் தழுவும் கீழ்க்கடலில் தோன்றி
மின்னிடுசெங் கதிர்ஓடி மேற்குக் கோடி
விண்ணுயர்ந்த மலைதழுவி மகிழ்ச்சி செய்யும்.
தன்னைநிகர் காவிரிதன் தோளை நீட்டித்
தடவயலின் இடையினிலே படியும், நல்ல
கன்னிநறுந் தமிழ்சிரிக்கும்; உயிர் சிலிர்க்கும்;
கவின்உயிரும் செந்தமிழும் வாழ்வைச் செய்யும்!

செல்வன்உயர் சாம்பசிவன் உள்ளம் சென்று
செல்விமங்கை யர்க்கரசி உள்ளம் சேர
வல்லியுளம் அவ்வுணர்வால் மலரப், பின்னர்
மலர்மணம்போல், யாழ்இசைபோல், வான் கதிர்போல்
முல்லைமலர் நறுந்தேனும், இனிமையும் போல்
முழுத்திங்களும் கசியும் நிலவும் போலே
நல்லஇரண் டுள்ளமும் ஒன்றாய் மலர்ந்த
நறுமணமே திருமணமாம். இன்னும் கேளீர்!

இரண்டுளத்தின் கட்டிலிலே தட்டுப் பட்ட
இன்பத்தேன் கடலினது கரையோ ரத்தில்
புரண்டுவரும் அலையில்முதற் றுளியின் பேர்தான்
புதியமணம். கேளுங்கள் இன்னும் சொல்வேன்!
ஒருவன்விழி தன்காதல் உரைக்கும்; கண்ட
ஒருத்திவிழி ஆம்ஆம்என் றுரைக்கும். ஆங்கே
இரண்டுளத்தில் எழும்இன்பக் கவிதை தன்னில்
இருக்கும்முதலெழுத்து மணம்! பிறிதோ வாழ்வு!

சிந்துநதி மேற்கினிலே பாயும்! வைகை
செங்கதிர்மேற் காதலொடு செல்லும்! தென்னை
உந்தியெழும் வான்நோக்கி! வையத்தின் வாய்
உதிர்ந்திடும்நன் மழைமுத்தம்! ஒவ்வா உள்ளம்
சந்திக்கா திருக்கின்ற இரண்டு நெஞ்சம்
சரிஇலா இருநிலைமை நரி மான்குட்டி,
இந்தஇரண் டைச்சிலபேர் போட்டுக் கட்டி
இறுக்கிடுவார்; மணமல்ல; அதன்பேர் வேறே!

மணமக்கள் தமை உங்கட் கறிவிக்கின்றேன்
“மக்களிலே சோர்வுற்ற சார்பினர்க்குத்
துணைபுரிதல் சுயமரியா தைஇ யக்கம்”
“தோற்றுவித்தோர் ஆயிரம் ஆண் டெனுங்காட்டி
அணிந்தறியா அணியாவார். அறிந் திராத
அறிவாவார். இப்பெரிய தமிழர் நாடு
கணந்தோறும் எதிர்பார்த்த தலைவர் ஆவார்”
கழறவோ? அவர்பெயரே இராம சாமி!

அப்பெரியார் இயக்கத்தின் ஆணி வேர்தான்
அமைகாஞ்சித் தங்கவேல். அவர்மகன் தான்
செப்புறுசேய் சாம்பசிவன்; தமிழர் தோழன்
திரு மணத்தான்! சென்னையெழிற் கண்ணப்பர்க்கு
கற்புதல்வி மணந்தோள்! நாம்வாழ்த்து கின்றோம்
“ஞாயிறுள்ள நாளெல்லாம் மணமக்கள் மேல்
ஒப்புநல் லாயுளின்பம் மக்கட் பேறோ
டுயர்தமிழின் அறிவுற்று வாழி! வாழி!!”

அண்ணாமலை சர்வகலாசாலையில் பாகிஸ்தான்!

ஒரு பார்ப்பனர் தொடுத்தவழக்கு

அண்ணாமலை சர்வகலாசாலையில், வைஸ்சான் சலராக இருக்கும் சர். கே. வி. ரெட்டி அவர்கள்மீது, சிண்டிகேட்மெம்பரும், வக்கீலுமான வி. கே. நாகராஜ அய்யர் சிதம்பரம் முனிசீப்கோர்ட்டில் ஒரு வழக்கு தொடுத்திருக்கிறார்.

சயன்ஸ்வகுப்பில், பாதிபங்கு பிராமணரல்லாத மாணவர்களாக இருக்கவேண்டுமென்று சர். கே. வி. ரெட்டி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார். இது சர்வகலாசாலை சட்டம் 5-வது பிரிவுக்கு விரோதமென்பது, பார்ப்பனவக்கீல் தொடுத்துள்ள வழக்கு. அதிகமார்க்கு வாங்கிய பிருமண மாணவர்கள் சேர்க்கப்படாது, குறைந்த மார்க்குவாங்கிய பிருமணரல்லாத மாணவர்கள் கலாசாலையிலே சேர்த்துக்கொண்டாராம்.

மேற்படி காரியத்தைச் செய்வதினின்றும் சர். கே. வி. ரெட்டி அவர்களைத் தடுக்கவேண்டுமென்பது ஐயரின் வழக்கு.

சிவப்பிரகாசம் அன்னம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம்

பெரியகாஞ்சிபுரம் தாமல்வார் தெருவில், தோழர் சிவப்பிரகாசம், தோழியர் அன்னம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 30—8—42 காலை 7-மணிக்குத் தோழர் அண்ணாதுரை தலைமையில், ஒருவிதச் சடங்குமின்றி நடைபெற்றது. மூன்றே நிமிடத்திலே, வாழ்க்கை ஒப்பந்தம் நடந்தேறியது. தாய்மார்களும் தோழர்களும் பலர் வந்திருந்தனர். சீர்திருத்தசம்பந்தமாக தோழர்கள் T. P. S. பொன்னப்பன், பேஙளூர் சுப்பிரமணியம், காஞ்சி கலியாணசுந்திரன், சி. பி. சின்னராஜு, ஜெகநாதன், கிருஷ்ணமூர்த்தி, ஏழுமலை, வெங்கட்ராமன், அண்ணாமலை, ஜனார்தனன், ஆகியோர் சொற்பொழி வாற்றினர். மணமகனின் சகோதரர் தோழர் கண்ணன் (கான்ஸ்டெபிள்) அவர்களின் சீர்திருத்த நோக்கம் போற்றப்பட்டது. மாலையில் பெரியார் திருமண இல்லத்திற்குச்சென்று, வாழ்த்து கூறினார்.

காஞ்சீபுரம் பண்ட்ஸ் Ltd,
காஞ்சிபுரம்

மாதம் ரூ. 25 சம்பளத்தில், நம்பிக்கையும் செல்வாக்குமுடைய ஏஜண்டுகள் ஒவ்வொரு ஊரிலும் தேவை. மற்ற விவரங்களுக்கு 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.

K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 6—9—42 [காஞ்சி.

மூன்று ஆண்டுகள் முடிந்தன!

உலகம் இருண்டு மூன்றாண்டுகளாகிவிட்டன. நாலாவதாண்டு ஆரம்பமாகிறது! இந்த ஆண்டாகிலும், விமோசனம் கிடைக்குமா! உலகம் போர்க்களமாகி 3-ஆண்டுகளாகி விட்டன. அமைதியும் சாந்தியும் இந்த ஆண்டின் அறுவடையாக இருக்குமா! உலகம், ரணகளக்காளியின் கூத்து மேடையாகி, கோரக் கொலைக்களமாகி, சித்திரவதைக்கு ஆளாகி, செந்நீர் ஆறுபுரளும்காடாகி, பிணக்குவியல் தொட்டியாகி, மூன்று ஆண்டுகள் முடிந்தன. இனியேனும், உலகம், மக்கள் வாழுமிடமாக வேண்டாமா! உலகில், கலை, கவிதை, காவியம், காதல், காட்சி, அறிவு வளர்ச்சி, ஆராய்ச்சி, தொழில் வளர்ச்சி, வாணிபம், முன்னேற்றம், முதலியனவற்றுக்கு மூன்றாண்டுகளாகத் தடைகள், தளைகள் ஏற்பட்டுவிட்டன. உலகு, நாலாவது ஆண்டிலாகிலும் விடுதலைபெற வேண்டும்.

போர்! பயங்கரம்! திகில்! திகைப்பு! மக்கள் மாள்வது! மணிபுரிகள் மண்மேடாவது, குடும்பம் குலைவது! குலை நடுக்கம்! கூக்குரல்! கோரம்! இவையே, மூன்றாண்டுகளாக உலகினரின் செவியைத்துளைத்து வந்தன! ஆனந்தகீதம், உலகினரின் செவிபுக, இந்த ஆண்டாகிலும், வசதி கிடைக்கவேண்டும்.

காளைகள் களத்தில், கன்னியர் தொழிற்சாலையில், கிழவர் வீட்டில், விண்ணிலே குண்டுபொழியும் விமானம், வீதிகளிலே பீதி, மன்னர்மாளிகை முதல் பாட்டாளியின் குடில்வரையிலே பதைப்பு, தூக்கமிழந்து, துயரில் உழன்று, ஏக்கத்தால் தாக்கப்பட்டு, உலகம் மூன்றாண்டுகளாக அவதிப்பட்டு வருகிறது. போதாதா இந்தக்கொடுமை! இன்னம் எத்தனை நாட்கள் உலகில் இருள் சூழ்ந்திருப்பது. வெற்றி ஒளி இவ்வாண்டாகிலும் வீசவேண்டும்.

பணிந்த பிரான்சு, பிடிபட்ட பெல்ஜியம், நொந்தநார்வே, திடுக்கிட்ட டென்மார்க், சித்திரவதைக்காளான செக்கோ, பொசுக்கப்பட்ட போலந்து, கருகிய கிரீட், காடாக்கப்பட்ட கிரீஸ், பயந்த பல்கேரியா, பிணைபட்ட பின்லந்து, யுக்தியை இழந்த யுகோஸ்லேவியா, ரணகள ருஷியா—இவ்வளவையும் கொத்தித் தின்று ஏப்பமிட எண்ணும் வெறிகொண்ட ஜெர்மனி, அதற்கு வெள்ளாட்டியாகிய இத்தாலி, சாமரம் வீசும் ஸ்பெயின்—இது ஐரோப்பா கண்டத்தின் காட்சி இன்று! சுற்றிலும் களமிருப்பினும், சுடுசொல் பாயினும், சுதந்திரச்சுடர் ஒளியுடன், ஸ்விடன், ஸ்விட்ஜர்லந்து, துருக்கி, ஆகியவைகள் மட்டுமே, களம்புகாது உள்ளன! பாலைவனத்து நீரோடைகள்!!

வார்சா, ராட்டர்டாம், இவை நகரங்களின் பெயர் மட்டுமல்ல! நாஜியின் நாசம் எத்தன்மையது என்பதை விளக்கும் உருவங்கள்!!

கவண்ட்ரீ, இலண்டன். பிரிட்டிஷ் நகரங்களாக மட்டுமில்லை இன்று. நாஜித்தாக்குதல் எனும் தணலில் வெந்த தங்கக்கோட்டைகளாக விளங்குகின்றன.

டோவர், பிரிட்டிஷ் துறைமுகமாக மட்டுமில்லை இன்று.—21-மைலுக்கு அப்பால்உள்ள எதிரியை, ஜெர்மன் படைகளை, நோக்கிச்சிரித்துக் கொண்டிருக்கும் வீரர் கோட்டமாக விளங்குகிறது!

விச்சி, ஒரு நகரின் பெயரல்ல இன்று, நாடி நடுங்குபவரின் நயவஞ்சகக் கூடமாக இருக்கிறது.

பெட்டேயின், ஒரு நாட்டுப் பரிபாலன கர்த்தாவின் பெயரல்ல, வயோதிகத்தால் வளைந்து, சுயநலத்தால் சோர்ந்து, சோரம் செய்தேனும் வாழவேண்டுமென்ற சொரணை கெட்ட தனத்துக்கு, சுருக்கமான பெயராக விளங்குகிறது.

லவால்-ஒரு ஆண்மை யாளனின் பெயராக இன்று இல்லை. அதிகாரலாகிரியால் மதிமயங்கி, மக்களைக் கூளமாகக் கருதும் கோணற்குணங் கொண்டோனின் பெயராகிவிட்டது.

குவிஸ்லிங். குவலயமெங்கும், குடிகெடுக்கும் குணத்தான், நாட்டைவிற்று எதிரியை நத்திப்பிழைக்கும் நாசகாலன், என்பதைக் குறிக்கும்சொல்!

ஐரோப்பாகண்டம், இன்று, கோரக்காட்சியும், கோணற்குணங்கொண்டோரின் கூத்தும் நிறைந்த கொட்டகையாகிவிட்டது. மூன்று ஆண்டுகளாகிவிட்டன, இத்தகைய இழிவைத்துடைக்க, பிரிட்டன் கிளம்பி! நாலாவதாண்டு பிறந்தது! நாசம் நின்று, பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம் என்னும் தத்துவம் வென்று, உலகு, மீண்டும் உல்லாசத்தைப் பெற வேண்டும்.

1939ம் ஆண்டு, செப்டம்பர் 3ந்தேதி, மாலை 4-45க்கு, பிரிட்டன், ஜெர்மனிமீது போர் தொடுத்தது. மூன்று ஆண்டுகளாக, பிரிட்டனுக்கு இருந்து வந்த இடுக்கணும் இடையூறும் அளவிட்டுரைக்க முடியாததாகும்.

கடலிலே கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, நகரங்கள் குண்டுமாரியால் நாசமாயின, டன்கர்க் முதலிய சம்பவங்கள் நேரிட்டன, கிரீட் தீவைஇழந்திட நேரிட்டது. ஆப்பிரிக்காவிலே அலைச்சல், டோப்ருக்வரைமீண்டும் எதிரிவசமாகிவிட்டது. மால்ட்டாதீவின்மீது, மட்டற்ற வஞ்சம்வைத்து, எதிரிகள் குண்டுபொழிந்தவண்ணம் இருக்கின்றனர். ஜிப்ரால்டர்மீது எதிரிக்கு நாட்டமிருக்கிறது. ஈஜிப்ட்டை பிடித்து, சூயசைச் சூறையாடிட சுவஸ்திகக் கொடியோனுக்கு எண்ணமிருக்கிறது. அதுமட்டுமா? இந்தியாவை விழுங்கவும், நீர் ஊறும்வாயுடன் நிற்கிறான்.

அவனது கிழக்கத்திக்கூட்டாளி ஜப்பான், மலாய் சிங்கப்பூர், பர்மா, அந்தமான், ஆகிய இடங்களைப் பிடித்துக்கொண்டு, சீனாவிலே சித்திரவதை செய்து, வருகிறான், சிலோனைத்தாக்கினான், விசாகையிலும் குண்டுகளை வீசினான், வங்கக்கடலைக் கலக்கினான், வங்காளத்தின் எல்லையிலே அவனது வாடை இன்றும் வீசியபடி இருக்கிறது.

ரஷியாவோ, திடீலென்று தாக்கப்பட்டது. ஜெர்மனியின் முழுசக்தியும் அதன்மீது! யுக்ரேனை இழந்துவிட்டது! காகசசிலேகடும்போர்! ஸ்டாலின்கிராடுக்கு ஆபத்து அதிகரிக்கிறது. மாஸ்கோமுனை, லெனின்கிராட்முனை, ரிஜாவ்முனை, காலினின்முனை, எனப்பலப்பலபோர்முனைகள்! நகரங்கள் இழந்தனர், நாடுகலியக்கண்டனர், நடுங்கினாரில்லை, நாமார்க்குங் குடியல்லோம் என்று கூறியே போரிடுகின்றனர். பழய கோட்டைகள் பிடிபட்டால், புதுக்கோட்டைகள் எழுப்புகின்றனர்! கோட்டை எழுப்பமுடியாது போனால் மக்கள்கூட்டத்தையே கோட்டையாக்குகின்றனர்! மாகினாட் அரண்பிளக்கப்படக்கூடும்! மக்கள் மன அரண், ரஷியாவிலே இருப்பது! டாங்கிகளால் கொளுக்கிடவோ, குண்டுகளால் தாக்கிடவோ, பீரங்கிகளால பிளந்திடவோ, முடியாது அந்த அரண்! ஜாரின் கொடுமையை வென்ற அரண்! முதலாளித்துவத்தை முறியடித்த அரண்! லெனின் கட்டியது! அதை இலேசென்று எதிரியும் கூறான். இன்று ரஷிய ரணகளத்திலே ரசமான செய்திகள் வர ஆரம்பித்துவிட்டன. இந்த ஆண்டு வெற்றிமேல் வெற்றிபெற்று, வீரரஷியா, உலகை விடுவிக்கும் உத்தமப்பணியை ஈடேற்றிவைக்கவேண்டும்.

சீனா சிதையவில்லை! சீறிப்பாய்ந்து, செந்நாய்போல் கடித்து சித்திரவதை செய்த ஜப்பானை, சீனா, "நில்" என்று நிமிர்ந்துநின்று கூறுகிறது. ஜப்பான் வசமான இடங்களை மீட்டுக்கொண்டு வருகிறது. செக்கியாங்மாகாணத்தை மீட்டுவிட்டனர். சீனாவிலே, இரத்தச்சேறு, பிணஎரு, உழைப்பெனும் உழவுகோல்! அறுவடை வெற்றியாகத்தான் இருக்கமுடியும்.

அமெரிக்கா, பிலிப்பைனை இழந்தது, மரக்கலங்களை இழந்தது, மனஉறுதியோ இழக்கமுடியாத மாநிதி! இன்று சாலமன் தீவுகளில், மில்னே கடலருகே, அமெரிக்கா வெற்றிகள் பெற்று வருகிறது.

ஆப்பிரிக்காவிலேயும், ஜெர்மன்வேகம் குறைந்து, நடைதளர்ந்துவிட்டது. ஜெனரல் ரோமல் மீண்டும் முன்னேற முயற்சிக்கிறார்! ஆனால், உல்லாசநடை நடக்க இனிமுடியாது! பிரிட்டிஷ் படைபலம் நேர்த்தியானதாக இருக்கிறது.

கடலிலே, பிரிட்டிஷ்கொடி பறக்கும் மரக்கலங்கள் கெம்பீரமாகச் சென்றவண்ணம் உள்ளன! பிரிட்டிஷ்படைகள், மடகாஸ்கரைப் பிடித்தன! மாற்றாரின் நாடுகளிலே வேவுப்படைகளை ஏவி, மணிஓசை முன்னே! என்றுரைக்கின்றன.

விண்ணிலே, பிரிட்டன் இன்று விசேஷ ஆதிக்கம் பெற்றுவிட்டது. ஆயிரம் விமானங்களை அனுப்பிற்று ஜெர்மனிமீது குண்டுபொழிய! மூன்றாண்டுகளுக்கு முன்பு, பதுங்கும் குழியிலே படுத்துக்கிடந்த பிரிட்டிஷ்வீரர்கள், இன்று பருந்துப்பாய்ச்சல் விமானமேறி கோலோன், எசென், பெர்லின் ஆகிய எதிரியின் இலக்குகளிலே, குண்டுகள் வீசி, எதிரி, பதுங்குமிடம் புகுவதைக்கண்டு, விண்ணிலே வட்டமிட்டவண்ணம், விரச்சிரிப்புடன் விளங்குகிறான்! பிரிட்டிஷ் விமானத்துடன் அமெரிக்க விமானங்களும் சேர்ந்துகொண்டன.

ஹாம்பர்க் எனும் எதிரி நகர்மீது மட்டும், 35-நிமிடங்களிலே 175000 குண்டுகளை வீசினர், பிரிட்டிஷ் விமானவீரர்கள். 7892 தாக்குதல்கள் நடந்திருக்கின்றன இதுவரை. பிரிட்டிஷார் பூச்செண்டுகள் பொழியவில்லை, குண்டுகளை! ஜெர்மன் தொழிற்சாலைகளில் தெரியும் குண்டுகள் தந்தவடுக்கள்!

இந்தியாவிலோ, ஒரு கட்சியின் ஓங்காரத்திருவிளையாடலைத்தவிர, மற்றப்பகுதியினர், மார்தட்டி நிற்கின்றனர். எங்கும் துருப்புமயம்! எங்கும் டாங்கிகள் உருளுகின்றன, லாரிகள் பறக்கின்றன, விமானங்கள் வட்டமிடுகின்றன, புதுப்புதுப்படைகள் அமைக்கப்படுகின்றன, போர்ஆர்வமும், ஆதரவும், புதுமுறுக்கும் பெற்று இந்த உபகண்டம் விளங்குகிறது.

மூன்றாண்டுகளுக்குமுன்பு, பிரிட்டன், ம்யூனிச்சுக்கே இலாயக்கானதாக இருந்தது! இரண்டாண்டுகளுக்குமுன்பு, டன்கர்க்கே நடைபெற முடிந்தது, மூன்றாமாண்டிலும், டோப்ருக் வீழ்ச்சி, சிங்கைச்சிதைவு, ஏற்பட்டது. நாலாவதாண்டு பிறக்கிறது! இந்த ஆண்டு, பிரிட்டன், தற்பாதுகாப்புத்திறன் கொண்டதாக மட்டுமில்லை, எதிரியைத்தாக்கும் திறனும், துணிவும், அதற்கான துணைவரும் பெற்று விளங்குகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்—அமெரிக்ககண்டம் சீனச்சாம்ராஜ்யம் சோவியத் ஒருபுறம்! ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றோர்புறம்! நீதி, நம்பிக்கை, நாகரிகம், ஜனநாயகம் சமதர்மம், ஒரு கூடாரத்தில்! வஞ்சகம், கொடுமை, காட்டுமிராண்டித்தனம், பாசீசம் மற்றோர் கூடாரத்தில்! உலகு, இங்கனம் இரண்டு கூடாரமாக இருக்கிறது.

ஒரு கூடாரத்தின்மீது நேசநாட்டுக்கொடிகள்! ஒற்றுமைக்கொடி ஒருபுறம், சீனக்கொடி மற்றோர்புறம் நட்சத்திரக்கொடி ஒருபுறம், சம்மட்டி அறிவாள் கொடி ஒருபுறம்!

மற்றோர் கூடாரத்தின்மீது, கழுகுக்கொடி, காலைக்கதிரோன்கொடி, சுவஸ்திகக்கொடி, பறக்கின்றன.

உங்கள் கூடாரம் எது?

நாட்டு நடப்பு.

காங்கிரஸ் மூட்டிவிட்ட கலகத்தீயின் வேகம் அனேகமாகக் குறைந்துவிட்டது. அவ்வப்போது, குழப்பம் விளைவிப்போர், தணலை, ஜ்வாலையாகச் செய்யமுயலுகின்றனர். கூட்டு அபராதம் ஏற்பட்டபிறகு, நாட்டுமக்களே, இனி நாசவேலைக்காரருக்கு இடந்தரக்கூடாதென்று முடிவுசெய்துள்ளனர் என்று தோன்றுகிறது. மாணவர்கள் மட்டும், இன்னமும், வேலைநிறுத்தம், வீதிவலம், கல்வீச்சு ஆகிய திருவிளையாடல்களைச் செய்வதிலே காரணமற்ற அக்கறை காட்டுகின்றனர். இத்தகைய மாணவர்களைப் பள்ளியினின்றும் நீக்கிவிட சர்க்கார் யோசனைகூறி இருக்கின்றனர், இதன் பலனாக, மாணவர் போக்கிலே விரைவில் மாறுதல் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

தமிழன்.

மதுரை, தோழர் ஆதித்தன் அவர்களை நிர்வாக ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் **தமிழன்** எனும் தமிழ் வாரத்தாள் வரப்பெற்றோம். அழகாக பதிப்பிக்கப்பட்டு, பலநிறப் படங்களும், சிறுகதை, துண்டு துணுக்கு, சரிதவரலாறு ஆகிய பகுதிகளும் கொண்டதாக இருக்கிறது. **தமிழன்** என்ற கருத்துக்கு, இன்று மேற்படிபத்திரிகை கொண்டுள்ள பொருளும், தமிழர் தொண்டு எதுவென்பதில் தோழர் ஆதித்தன் அவர்கள் காட்டும் போக்கும், நமக்குப்பிடித்தமானதல்ல என்றபோதிலும், நல்லமுதலுடன், நேர்த்தியான முறையில், அழகியபத்திரிகையை ஒருதமிழர் நடத்துவதுகாண அகமகிழ்கிறோம். தமிழன் உண்மையிலேயே, தமிழனாக வேண்டுமென்பது நமது அவா. காலம் இந்தமாறுதலைச் செய்யின் நாம் மிக்கக்களிப்போம். தனிப்பிரதி விலை இரண்டணா.

தொடர் கதை

கலிங்கராணி

[சேலமியன்.]

முன்பு:- குலோத்துங்கனின் படைத் தலைவர்களுள் ஒருவனான வீரமணி, அரண்மனைத்தோழி நடனராணியைக் காதலிக்கிறான். கலிங்கப் போர் தொடுக்கப்படுகிறது. வீரமணியின் குதிரைப்படை கலிங்க எல்லைக்கு வந்துவிடுகிறது. கலிங்க மன்னன், திசை முகன் எனும் மந்திரியின் துர்போதனையினால் மதியிழக்கிறான். பிறகு...........

"மலைக்காதே மன்னா! வீரமணி குதிரைப்படையுடன் வரட்டும், ரமணிபோல், அவன் ரணகளத்தை விட்டு ஓடும்படி செய்ய நமது படைகளை ஏவுகிறேன். கலைக்காதே, சமரிலே சங்கடங்கள் நேரிடுவது சகஜந்தான், ஆனால் சோழனின் சைன்யத்தை நமது வீரமெனும் சண்டமாருதத்தால் அழித்தொழிப்போம். இளைக்காதே எங்கராயா! திசைமுகனின் தீர்மானம், இலேசென்று எண்ணாதே. நிற்காதே காவற்காரனே! ஓடிச்சென்று, என் உத்திரவை படைத்தலைவர்களிடம் கூறு, முரசுகொட்டு! தோள்தட்டு! வாள்வீசு! வாகை தேடு!" என்று வெறி பிடித்தவன்போல் திசைமுகன், மன்னனைப்பார்த்தோர் மொழியும், மதியுரைத்த மந்திரியைப் பார்த்தோர் மொழியும், வேலையாட்களைப் பார்த்து வேறோர் மொழியுமாகப் பேசினான்.

போர்! போர்! கடும் போர்! சோழனின் படைகளுடன் போர்! என்ற கூக்குரலும், எல்லையிலே எதிரிப் படைவந்து விட்டதாம், குதிரைப்படை கிளப்பியதூசி கலிங்கத்தை நோக்கிக் கடுகிவருகிறதாம்! வீரமணியாம், தொண்டைமானின் 'அம்பு' போன்றவனும், துரிதமாகப் பாய்ந்திடும் பரிப்படையினனும், போர்புரிவதிலே ஆர்வமிக்கவனும், அவன்புகழ்,விரிந்த மலரின் மணமென எங்கும் வீசுகிறதாம் என்று வீதிகளிலே பேசிக்கொண்டனர். பலவீடுகளிலே விம்முங்குரலும், வியர்க்கும் முகமும், நீர்வீழ்ச்சியன்ன கண்களும், வெடவெடக்கும் உடலும் கொண்ட வனிதையர், வாடிக்கிடந்தனர்.

கலிங்கனின் படைகள், அவசரஅவசரமாக அணிவகுக்கப்பட்டன. வீரமணியின் குதிரைப்படையினைத் தாக்க, கலிங்கத்தின் பரிப்படையினர், கிளம்பினர். கிளம்புங்காலை, மன்னன் கண்முன் பிணமானாலும் ஆகலாமே யன்றி, பேடியாகலாமோ என்றெண்ணினர். எனவே சீறினர். செந்தூள் பறக்க குதிரைகள் பாய்ந்தன. எல்லையை அணுகும்போதே எதிரி, அணிவகுத்துநின்ற சோழனின் குதிரைப் படைமீது கணைகளைக் கடுவேகமாக விடுத்தனர். அம்புகள் பாய்ந்து வருவதால், குதிரைகளின் உடலமும், வீரர்களின்உடலமும் தைக்கப்பட்டு, படைவரிசை கலைக்கப்பட்டுவிட்டால் கலைந்துபோன படையினுள்ளே புகுந்து வாட்போரிட்டு, வதைத்துவிட வேண்டும் என்பது கலிங்கக் குதிரைப் படைத்தலைவனின் கருத்து.

வீரமணி, வீரமும் யுக்தியும் அறிந்தவன். படைவரிசை கலைவது, தனக்குப் பாதகமாகவும், எதிரிக்குச் சாதகமாகவுமே இருக்கும் என்பதை நன்கு உணர்ந்துகொண்டான். தந்திரமாக, எதிரியின் படையை நெருங்கி வருமாறு செய்து, போரிடவேண்டும் என்பது வீரமணியின் திட்டம். எனவே கேடயங்களால், தங்களை அம்புமாரியினின்றும் தடுத்துக்கொள்ளப் போர் வீரர்கள் பயிற்சி பெற்றிருப்பினும், யுக்தியாகப் போரிடவேண்டி, தன் படையைத் திருப்பி, பின்நோக்கிப் போகும்படியும், ஆனால், வேகமாகச் சென்ற போதிலும், விநாடியிலே திரும்பி, எதிர் நோக்கிப் பாயும் நோக்கத்தை மறக்கலாகாதென்றும் கூறி, உத்திரவிட்டான். சோழனின் குதிரைப் படைகள், பின்வாங்கி ஓடுகின்றன, என்று நம்பிய கலிங்கக்குதிரைப் படைத் தலைவன், கைகொட்டி நகைத்து, "வீரர்காள்! விடாதீர் ஓடும் அந்த வீம்புக் காரரை" என்று கூறினான். கலிங்கப்படைகளிப்புடன் பாய்ந்து சென்றது. வேகமாகப்பாய்ந்து வரும் வேளையிலே, வீரமணி தனது குதிரைப் படையின் வரிசையை இரண்டாகத் துண்டித்து இடையே கலிங்கப் படை புகுவதற்கு வழி தோன்றிடச் செய்தான். முறையாகச் செய்யப்பட்ட இதனை உணராது, முறியடித்துவிடுவார்கள் என்று கிலிகொண்டு, சோழனின் படை பிளந்துவிட்டது என்று. கலிங்கப்படையினர் கருதி, படைவரிசை இடையை ஏற்பட்ட பிளவுக்குள் பாய்ந்தனர். பாய்ந்ததுதான் தாமதம், வீரமணி, "தூக்குவீர் கத்தியை! தாக்குவீர் எதிரியை!!" என்று கர்ஜனை புரிந்தான். உடைவாள் உருவினர் சோழ வீரர், இடையே வந்த கலிங்கக் குதிரைகளின் கால்களைத் துண்டிக்கலாயினர்! ஒரு வெட்டு குதிரையின் காலில்! குதிரை குப்புற வீழ்ந்ததும், கலிங்க நாட்டானின் கழுத்துக்கு மற்றோர் வெட்டு! அவன் குதிரையுடன் பிணமாவான்! இத்தகைய முறையினால், கலிங்கக் குதிரைப் படையிலே பலத்த சேதத்தை உண்டாக்கி விடவே, மிகுந்திருந்த படை, ஊருக்குள் ஓடிவிட்டது. கோட்டை வாயற்கதவைத் தாளிட்டுக் கொண்டது. கோல் கொண்டோன் கோபக்கனல் உமிழும் கண்களுடன் அவர்களை நோக்கி, "கோழைகளே! நானே நேரில் களம் வருகிறேன். நால்வகைப் படையும் நம் முன் கொண்டுவருக" என்று நவின்றான். படையும் பலமாகக் குவிந்தது: கலிங்க மன்னனின் கோபம்; காட்டுத் தீ போல் காணப்பட்டது. நறநற வெனப் பற்களைக் கடித்தான். அவனுடைய முகம் சிவந்துவிட்டது. கையிலே உருவிய வாளேந்தி நின்றான். அன்று அவன் இருந்தது போன்ற வீர உருவத்துடன், அதற்குமுன் கலிங்கம் அவனைக் கண்டதேயில்லை. உறுதி கொண்டான். ஊர் அழியினும் சரியே, படைமுழுதும் பாழாயினும் சரியே, உடலில் உயிர் உள்ள மட்டும், போரிடுவேன், என்று ளுள் உரைத்தான். சூரனெனக் கிளம்பினான் களம் நோக்கி.

(தொடரும்)

அபிசீனியா

1935ல் இத்தாலியிடம் பிடிபட்டு, 1939ல் பிரிட்டனால் விடுவிக்கப் பட்ட அபிசீனியாவை, பிரிட்டிஷார் அடிமை கொள்வார்கள் என்று வீணர்கள் பேசினர். இப்போது அபிசீனியாவுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டு விட்டது. அபிசீனியாவிலே இருந்து வந்த பிரிட்டிஷ் படைகள், வாபசாகி விட்டன.

லீக்நிதி

முஸ்லீம் லீக்குக்கு அன்பர்கள் அளித்துள்ள நன்கொடை, ஆகஸ்ட் 26-ந் தேதி வரையுள்ள கணக்குப்படி, 3,48,611—9—8 ஆகும்.